கல்குடா கல்வி வலய வள நிலைய பரீட்சை சபை

பயிற்சி பரீட்சை க.பொ.த. (உ/த) 2018

கர்நாடக சங்கீதம்

தரம்-12 (2019) **தவணை-03** **நேரம் : 3மணி**

சுட்டெண் : **புள்ளி :.....**

பகுதி-I

எல்லா வினாக்களுக்கும் விடை தருக
சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. ஒரு இராகத்தின் தொடக்கத்தில் வரும் ஸ்வரம்.
(1) நியாச ஸ்வரம் (2) கிரகஸ்வரம் (3) அம்ஸ ஸ்வரம்
(4) கம்பாத ஸ்வரம் (4) கமக ஸ்வரம்

02. "நெரநம்மி" என்னும் அடதாளம் அமைந்த இராகம்.
(1) காம்போஜி (2) பைரவி (3) கானடா (4) சங்கராபரணம் (5) கல்யாணி

03. சமஸ்டி சரணத்தையுடைய மத்திம காலக் கீர்த்தனை.
(1) ஞானம் அருள்வாய் - ஹம்சத்வனி (2) பார்வதி நாயகனே-சண்முகப்பிரியா
(2) உன்னையல்லால் - கல்யாணி (4) கோபிகா மனோகரம் - மோகனம்
(5) தேவி நீயே துணை - கீரவாணி

04. "ஸொகஸீலூர ஹொயலுகோரிநீ" என்னும் தில்லானவை இயற்றியவர்.
(1) டாக்டர் பாலமுரளி கிருஸ்ணா (2) மஹா வைத்திய நாதய்யர்
(3) முத்துஸ்வாமி தீட்சிதர் (4) பட்டணம் சுப்ரமணி ஐயர்
(5) தரங்கப்பட்டி பஞ்சநாத ஐயர்

05. திரிஸ்வர வக்ர இராகத்திற்கு உதாரணம்.
(1) அஸாவேரி (2) ஹர்நாடக (3) ஸாரங்கா
(4) ஆனந்த பைரவி (4) கமாஸ்

06. தைவதாந்திய இராகத்திற்கு உதாரணம்.
(1) நாத நாமக்கிரியை (2) நவரோஜ் (3) புனனா கவராளி
(4) குறிஞ்சி (5) ஸகானா

07. சூத்திர கண்டம், உபாங்க கண்டம், பாஷாங்க கண்டம் என்னும் பகுதிகளையுடைய உருப்படி.
(1) வர்ணம் (2) கீர்த்தனை (3) பதம் (4) தில்லானா (5) லக்ஷண கீதம்

08. பஞ்சதாள சூளாதிகளை இயற்றியவர்.
(1) புரந்தரதாஸர் (2) கே. பொன்னையாப்பிள்ளை (3) திருப்பதி அன்னமாச்சரியார்
(4) மாம்பழக்கவிராயர் (5) கவிக்குஞ்சர பாரதி

09. கிந்துஸ்தானி இசையில் "கஜல்" என அழைக்கப்படுவது.
(1) பதம் (2) ஜாவாளி (3) தில்லானா (4) கீர்த்தனை (5) வர்ணம்

10. நாட்டிய நிகழ்வில் 7வதாக இடம்பெறும் உருப்படி.
(1) ஜதிஸ்வரம் (2) கீர்த்தனை (3) வர்ணம் (4) தில்லானா (5) திருப்புகழ்

www.kedu.lk

11. ஆண் இராகம் எனக் குறிப்பிடப்படும் இராகம்.
(1) ஹம்சத்வனி (2) ஆபோகி (3) ஆரபி (4) கமாஸ் (5) முஹாரி

12. திருமகள் நினைவுடன் மனதில் நிறைந்துள்ள சுகமான அனுபவம் என்ற பொருளையுடைய இராகம்.
(1) ஸ்ரீ ரஞ்சனி (2) ஹிந்தோளம் (3) மோகனம் (4) ஆனந்த பைரவி (5) காபி

13. ஸ்திர வாத்தியம் என அழைக்கப்படுவது.
(1) ஆர்கன், பியானோ (2) மிருதங்கம், பிடில் (3) திருச்சின்னம், மத்தளம்
(4) ஆர்கன், தபேலா (5) பியானோ, பிடில்

14. "அலகு யாழ்" என அழைக்கப்படும் வாத்தியம்.
(1) வீணை (2) வயலின் (3) தவில் (4) முகர்சிங் (5) கெஞ்சிரா

15. இசை ஞானியார், தாளச் செல்வர், முத்தமிழ் அரசு, நவர நாயகர் என அழைக்கப்படுபவர்.
(1) தியாகராஜர் (2) முத்துஸ்வாமி தீட்சிதர் (3) அருணகிரிநாதர்
(4) திருஞானசம்பந்தர் (5) திருவள்ளுவர்

16. ஸ்வரமாலிகா என்னும் நூலை வெளியிட்டவர்.
(1) பாத்கண்டே (2) தான்சேன் (3) பாக் (4) மொஸாட் (5) பீதோவன்

17. நாதஸ்வரச் சக்கரவர்த்தி என அழைக்கப்பட்ட இசைப் பெரியார்,
(1) வீணை பாலச்சந்தர் (2) திருவாவடுதுறை ராஜரத்தினம் (3) M.L. வசந்தகுமாரி
(4) A.K. பட்டம்மாள் (5) சேத்ரக்ஞர்

18. ஸரிகமதாநிஸ் - ஸ்நிஸ்தாபமபகாமரிஸ என்னும் ஆரோகண அவரோகணத்தையுடைய இராகம்.
(1) ஹம்சத்வனி (2) கானடா (3) காம்போதி (4) ரீதிகௌளை (5) ஹிந்துஸ்தான் காபி

19. சதுர்தாண்டிப் பிரகாசிகை என்ற நூலை இயற்றியவர்.
(1) வேங்கடமகி (2) கோவிந்தச்சாரியார் (3) துளஜா மகாராஜா
(4) ஸ்வாதித்திருநாள் மகாராஜா (5) பரதமுனிவர்

20. ஸ்வரமும் சாகித்யமும் ஒரே அட்ஷரத்தில் இடம்பெறும் அணி.
(1) ஸ்வராஷ்சரம் (2) மகுடஸ்வரம் (3) மணிப்பிரவாளம்
(4) சங்கதி (5) மத்திமகால சாகித்யம்

21. வட இந்தியாவில் "கடா" என அழைக்கப்படும் வாத்தியம்.
(1) வீணை (2) வயலின் (3) கடம் (4) மிருதங்கம் (5) தபேலா

22. நான் சிங்காசனத்திற்கு வருகின்றேன் என்ற கூட்டிசைப்பாடலை இயற்றியவர்
(1) பாக் (2) மொஸாட் (3) பீதோவன் (4) பாத்கண்டே (5) தான்சேன்

23. தியாகராஜரது பஞ்சரெத்தினக் கீர்த்தனைகளில் "ஸாதிம்சன" பாடல் அமைந்துள்ள இராகம்,
(1) நாட்டை (2) கௌளை (3) ஸ்ரீ (4) வராளி (5) ஆரபி

24. 'ஒரு பொழுதும் இருசரண" என்னும் திருப்புகழ் அமைந்ததாளம்.
(1) மிஸ்ர ஜம்பை (2) சதுஸ்ர ஜம்பை (3) திஸ்ர ஜம்பை
(4) கண்ட ஜம்பை (5) சங்கீர்ண ஜம்பை

25. ஸரிமபநிஸ் - ஸ்நிபமரிஸ என்னும் ஆரோகண உவரோகணத்தை உடைய இராகம்,
(1) பிலஹரி (2) ஆபோகி (3) ஆரபி
(4) ஹம்சத்வனி (5) மத்தியமாவதி

(25x1 = 25 புள்ளி)

www.ikdu.lk

பகுதி-II

பகுதி – I இல் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும், பகுதி – II இல் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

பகுதி - I

01. (1) இசைக்கருவிகளின் பிரிவுகள் எவை? (2 புள்ளிகள்)
(2) இசைக்கருவிகளின் பிரிவுகள் பற்றிக் குறிப்பிடும் நூல் எது? (12 புள்ளிகள்)
(3) வாத்தியத்தின் ஸ்தாயி எல்லைகளைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
(4) இசைக்கருவிகளின் பிரிவுகளை உதாரணங்கள் மூலம் விளக்குக. (10 புள்ளிகள்)

02. (1) ஜனகராகத்தின் மறு பெயர்கள் யாவை? (2 புள்ளி)
(2) ரி, கி சங்கரத்திலுள்ள மேள இராகங்களின் பெயர்களையும் அவற்றின் மேள எண் சங்கேதாட்ஷரங்கள் போன்றவற்றையும் குறிப்பிடுக. (9 புள்ளிகள்)
(3) திவிஸ்வரவக்ர இராகத்திற்கு 2 உதாரணம் தருக? (2 புள்ளிகள்)
(4) ஆரோகண அவரோகணத்தில் மூன்று ஸ்வரம வக்ரமாய் வரும் இராகத்தை உதாரணத்துடன் தருக? (2 புள்ளிகள்)

03. (1) "அகல்" வடிலை ஒத்த தாள வாத்தியம் யாது? (1 புள்ளி)
(2) அவ்வாத்தியத்தின் படம்வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக? (3 புள்ளிகள்)
(3) இவ் வாத்தியத்தின் அமைப்புப் பற்றி விளக்குக? (3 புள்ளிகள்)
(4) இவ் இசைக்கருவி வாசிக்கும் முறை பற்றி விளக்குக. (4 புள்ளிகள்)
(5) இவ்வாத்தியம் வாசிப்பதில் தேர்ச்சி பெற்ற இசைக் கலைஞர்களைக் குறிப்பிடுக? (4 புள்ளிகள்)

பகுதி - II

04. பின்வரும் இராகங்களுக்கு விரிவான லக்ஷனம் தருக?
(உருப்படிகள் சஞ்சாரம் குறிப்பிடப்படல் வேண்டும்.)
(1) ஹம்சத்வனி (2) ஆபோகி (7½+7½ = 15 புள்ளிகள்)

05. பின்வரும் இசைப் பெரியார்களுள் இருவர் பற்றி விளக்குக.
(1) பாத்கண்டே (2) பீதோவன் (3) தாண்சேன்
(7½+7½ = 15 புள்ளிகள்)

06. (1) 19ஆம் நூற்றாண்டில் இயற்றிய உருப்படி யாது? (1 புள்ளி)
(2) ஹிந்துஸ்தானி இசையில் "தரானா" என அழைக்கப்படும் உருப்படி யாது? (1 புள்ளி)
(3) 35, 108, 175 போன்ற தாளங்களில் பாடல்கள் இயற்றியவர் யார்? (1 புள்ளி)
(4) சூத்திரகாண்டம், உபகாண்டம், பாஷாங்க காண்டம் என்னும் மூன்று பகுதிகளை உடைய உருப்படி எது? (1 புள்ளி)
(5) மேலே குறிப்பிட்ட உருப்படிகளில் ஒன்றைப் பற்றி விரிவாக விளக்குக. (11 புள்ளிகள்)

07. நீர் கேட்டு இரசித்த இசைக்கச்சேரி ஒன்றைப் பற்றி விமர்சனக் கட்டுரை வரைக?
(15 புள்ளிகள்)

www.ikedu.lk